# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 27/2020** **Date:21.07.2026.**

**(DW1)- சகாயராஜேஷ்**

**3** முதல் **10** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் முறையான ஆவணங்கள் தாக்கல் செய்ததன் அடிப்படையிலும் எனது கம்பெனியை நேரடியாக ஆய்வு செய்த பின்னர் தான் எனது கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தடையில்லா சான்றிதழ் முறையான ஆவணங்களை சமர்பித்து உரிய விசாரணைக்கு பின்புதான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் எனக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதியின் அடிப்படையில் தான் கட்டிடம் கட்டிடுள்ளேன் என்றால் சரிதான். தற்போது ஐஸ் பிளண்ட் செயல்படவில்லை என்றால் சரிதான். எனது ஐஸ் பிளண்டிற்கு எதிராக கொடுக்கப்பட்ட மனுவின் மீது 6 ஆம் பிரதிவாதியால் முறையான விசாரணை செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. திரவ நிலையில் உள்ள அம்மோனிய பயனப்டுத்துவதால் பொது மக்களுக்கு எந்த இடையூறும் இல்லை என்றால் சரிதான். ஐஸ் பிளண்டில் உள்ள போர்வெல்லை ஐஸ் பிளண்டிற்கு மட்டுமே பயன்படுத்துவேன் என்று நான் அளித்த உறுதி மொழியின் அடிப்படையில்தான் எனது கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**